

புரட்சிக் கவிஞர்

# பாரதிதாசன் வாழ்க்கையிலே!

## முத்தமிழ் நிலையம்

"பாரதிதாசன் நன்றாகக் கவி பாடுகிறார். ஆனால், அவர் பிராமணத்துவேஷி" என்று சிலர் கூறுகிறார்கள். பாரதிதாசன் பிராமணத்துவேஷிமட்டுமல்ல; மதத்தின் பேராலும், ஜாதியின் பேராலும், தர்மத்தின் பேராலும், நீதியின் பேராலும் யார் யார் கொள்ளையடிக்கிறார்களோ, யார் யார் மற்றவர்களை ஏமாற்றுகிறார்களோ, யார் யார் பிறர் உழைப்பில் உண்டு இன்பம் அனுபவிக்கிறார்களோ, அத்தனைப் பேர்களையும் துவேஷிக்கிறார் பாரதி...

—ஏ. கே. செட்டியார்.

*ஆசிரியர் : "குமரிமலர்"*

# பதிப்புரை

முல்லை எங்ஙனம் மனமகிழ மணமூட்டுமோ, அங்ஙனமே முல்லை முத்தையாவின் எழுத்துக்களும் அகமலர மகிழூட்டும். அவர் முல்லை வெளியீட்டின் மூலம், தமிழ் உலகம் தமிழ் மணங் கமழச் செய்தார் என்பதை யாவரும் அறிவர். அவர்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் புரட்சிக் கவி வெள்ளத்தைத் தமிழுலகத்தில் பாய்ச்சினவர். அவ்வெள்ளத்தால், பழமை என்ற வழுக்கைப் பாசிகளும், மூடப் பழக்கவழக்கங்கள் என்ற முடைநாற்றப் பொருள்களும் தமிழ் நிலத்தினின்றும் அடித்துக் கொண்டு போகப்பட்டன. அதற்காக அவருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக் கடப்பாடுடையது.

பண்டைக் காலத்திலே, நம் நாட்டிலே பல தமிழ் அறிஞர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளும், பிற குறிப்புக்களும் இப்போது நமக்குக் கிடைத்தில. அக்காலத்திலுள்ள தமிழறிஞர்கள் இதில் அக்கரையும் செலுத்தவில்லை. ஆனால், ஓரிருவர், விநோதரசமஞ்சரி என்ற உரை நடை மூலமும், தனிப் பாடற்றிரட்டு என்ற தமிழ்ச் செய்யுட் கோவை மூலமும், சில குறிப்பிடத்தக்க புலவர்களின் ருசிகரமான நிகழ்ச்சிகளைக் குறிப்பட்டுள்ளனர். அவைகள்தான் நாம் அறியும் தமிழ்ப் புலவர் சரித்திரங்கள்.

நம் முல்லை முத்தையா அவர்கள் இதுபோன்ற குறை இனி ஏற்படா வண்ணம், பகுத்தறிவின்

ஒளியாய் விளங்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாறுகளில் சில ருசிகரமான நிகழ்ச்சிகளைத் தாம் நேரில் கண்டறிந்தவாறு மிக்க இனிய எளிய நடையில் எழுதி உதவியிருக்கின்றார்.

அவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு பல காலம் நெருங்கிப் பழகியவராதலால், அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சில ருசிகரமான நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதற்கு அவர் மிக்க பொருத்தமானவரே. அவர் எழுதிய, இந்தச் சிறிய நூலைத் தமிழுலகம் வரவேற்குமென்று நம்புகின்றோம்.

*முத்தமிழ் நிலையத்தார்,*
*சென்னை-1.*

# இதிலுள்ளவை

*

1. வாழ்க்கை
2. கவிக்காளை
3. புராணக்கூற்று
4. வாழைப்பழம்
5. குறும்பு
6. தங்கக்கலசம்
7. இரகசியம்
8. தாராளம்
9. விழிப்பு
10. உணவு
11. வியப்பு
12. கிண்டல்
13. மறதி
14. திகைப்பு
15. ஐந்து முத்தம்
16. கவிதையில் புரட்சி

---

# 1. வாழ்க்கை

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 29-4-1891ல் புதுவையில் பிறந்தார். புதுச்சேரியில் வணிகராயிருந்த கனக சபை முதலியார், கவிஞரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம்.

சுப்புரத்தினம் சிறுவயதிலேயே, பிரஞ்சுமொழிப்பள்ளியில் பயின்றார். ஆயினும், தமிழ்ப்பள்ளியில் பயின்ற காலமே அதிகம். தமது பதினாறும் ஆண்டில் கல்வே கல்லூரியில் தமிழ்ப்புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். இயல்பால் தாய்மொழிப்பற்றும், முயற்சியால் தமிழறிவும் நிறைந்தவராதலின், இரண்டாண்டில் கல்லூரியிலேயே முதலாவதாகத் தேறினார். பதினெட்டு வயதிலேயே கவிஞரின் சிறப்புணர்ந்த அரசியலார், அவரை அரசியல் கல்லூரித் தமிழ் ஆசிரியராக்கினர்.

இளமையிலேயே, இயலுடன் இசையும் நாடகமும் அவரைத் தழுவி நின்றன. கவிஞரின் இசை இனிமையில் ஈடுபட்டோர், பள்ளி நாடகங்களில் அவரை முக்கிய நடிகராக்கி மகிழ்ந்தனர்.

முத்தமிழ் மன்னராக விளங்குவதற்குரிய அறிகுறிகள் இளமையிலேயே அவரிடம் காணப்பட்டன.

மொழியறிவும், இசையுணர்வும், திட எண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறுவயதிலேயே, சிறு சிறு பாடல்கள் அழ

காகச் சுவையுடன் எழுதித் தம் தோழர்களுக்குப் பாடிக் காட்டுவார். அதில் அதிகமான இன்பத்தை அடைவார்.

ஒரு நண்பருக்குத் திருமணம் நடந்தது; விருந்துகள் நடைபெற்றபின், பாரதியாரின் நாட்டுப் பாடலைக் கவிஞர் கம்பீரமாகப் பாடினார். பாரதியாரும் அந்த விருந்தில் கலந்திருந்தார். பாரதியார் அந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருப்பதை நம் கவிஞர் அறியமாட்டார். அந்தப் பாடலே அவரைப் பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.

"சுப்புரத்தினம் ஓர் கவி—அதற்குரிய தன்மை அவரிடம் உண்டு" என்ற எண்ணம் அவரைப் பார்த்தபொழுதே பாரதியாருக்குத் தோன்றியிருக்க வேண்டும். ஓர் நாள் பல நண்பர்களிடையே, இதைத் தெரிவிக்க விழைந்த பாரதியார், "சுப்புரத்தினம் கவி இயற்ற வல்லவன்" என்று கூற, 'எங்கே எழுதச் சொல்லுங்கள் பார்ப்போம்' என்று நண்பர்கள் கேட்க, 'பாடு' என்று பாரதியார் சொல்ல, "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்ற பதினாறு வரி கொண்ட இரண்டடிகளைப் பாடினார். அந்தப் பாட்டின் அழகும்—பொருளும் அவரைப் பாரதிதாசன் என்று தமிழகத்திற்கு உணர்த்தின. வேறு யாரும் பெறாத மதிப்பை—பாராட்டை—புகழை ஆசீர்வாதத்தைப் பாரதியாரிடம் பாரதிதாசன் பெற்றார். கவிஞன் என்ற சிறப்பால்!

கனக—சுப்புரத்தினத்தின் முதற்பாட்டு பாரதியாராலேயே, "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்

தைச் சேர்ந்த கனக—சுப்புரத்தினம் எழுதியது" என்றெழு தப்பட்டுச் 'சுதேசமித்திரன்' இதழுக்கு அனுப்பப்பட்டது.

பாரதியாரிடம் சுமார் பத்து ஆண்டுகளுக்குமேல் பாரதிதாசன் பழகியிருக்கிறார். பாரதியாரின் அற்புத வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாரதிதாசன் வாயிலாகக் கேட்டு மகிழாதவர் இல்லை.

பாரதிதாசன் அவர்கள் தொடக்கத்திலிருந்தே, சாதி பேதத்தையும், சமயபேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும், விரிந்த அறிவும், கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர்.

பாரதிதாசன் அவர்கள், அந்தக் காலத்தில் கதரைப் பற்றிய பிரசாரப்பாட்டுக்களை மிக அற்புதமாகப் பாடி இருக்கிறார்.

கவிஞர் பாடிய "சுப்பிரமணியர் துதியமுது" என்ற நூலில் உள்ள 'கீர்த்தனைகள்', கீர்த்தனாசிரியர்களுக்கும் வழி காட்டக் கூடியன.

பாரதிதாசன் பாடல்கள் சிலவற்றைப், 'பாரதியாரின் பாடல்' என்றே பல நண்பர்களால்—பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதும் உண்டு.

பாரதிதாசன் அவர்கள் நிரம்ப நகைச்சுவை நிரம்பியவர். அவரது சிறு குறிப்பு முதல் கட்டுரை, கவிதைகள்

வரை அனைத்தும், கருத்து — உணர்ச்சி — நகைச்சுவைகள் பொருந்தியிருப்பதைப் பரக்கக் காணலாம்.

நிலைத்த நெஞ்சினர்; நேர்மை அவர்தம் இயல்பு. அவருக்குச் சூழ்ச்சி தெரியாது! உண்மை—உழைப்பு—மேதை இவைகளுக்கு மத்தியில் எப்போதும் வீற்றிருப்பவர். "நான் செய்ய வேண்டியது என்னவென்பதுதான் என்னுடைய சிந்தனையே தவிர, பிறர் என்ன எண்ணுவார்கள் என்பதல்ல!'' என்ற ஞானி எமர்ஸன் கருத்துத்தான் பாரதிதாசன் கருத்தும்.

பாரதிதாசன் தமிழ்க்கவிஞர்—தமிழர்களின் கவியரசர். தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவிஞர். தமிழர்களின் புகழ் மீண்டும் மேதினியெங்கும் ஓங்குவதற்காகப் பிறந்த உத்தமக் கவிஞர்.

கவிஞரைப் பார்த்தால், அவருக்கு ஐம்பத்தி எட்டு வயது என்று யாரும் கூறமுடியாது. பார்வைக்கு முப்பது வயதினராகவே தோன்றுவார்.

1920-ம் ஆண்டில் சத்தியாக்கிரஹ இயக்கத்தில் பங்கு எடுத்துக் கொண்டார்.

அரவிந்தர், வ. வெ. சு. ஐயர், பாரதியார், வ. உ. சி. ஆகியோரிடம் பல வருஷங்கள் நெருங்கிப் பழகியிருக்கிறார். பத்திரிகைத் துறையிலும் பாரதிதாசனுக்கு நல்ல அனுபவம் உண்டு. புதுவையிலிருந்து பல பத்திரிகைகள் வெளி

யிட்டுள்ளார். பத்திரிகை உலகிலே ஒரு புரட்சிகரமான புது முறையான "கவிதாமண்டலம்" என்ற பத்திரிகையை நடத்தினர். அந்தப் பத்திரிகை தலைப்பு முதல் இறுதிவரை எல்லாம் கவிதைமயம்தான்! கவிஞர் தம் முப்பதாம் வயதில் திருமதி பழநியம்மாளை மணம் புரிந்து கொண்டார்.

கவிஞருக்கு ஒரு செல்வனும், மூன்று செல்விகளும் உண்டு; கவிஞர் அவர்கள், கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்று (ரிடையர்டு ஆகி) இப்போது தமிழ்த் தொண்டு புரிந்துவருகிறார்.

## 2. கவிக்காளை

இளமையிலேயே, புலமை வளம் பெற்றது கவிஞர் பாரதிதாசன், சுப்பிரமணிய பாரதியார் அவர்களிடத்தில் புதுச்சேரி அரசாங்கக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் தேர்விலும் தம் பதினெட்டாம் வயதிலேயே புதுவையிலேயே முதன்மையாகத் தேறித் தம் புலமையைப் புலப்படுத்தினர்.

நம் கவிஞருக்கு, அரசாங்கத்தார் உடனே ஆசிரியப் பதவி அளித்து, முதன்முதலில் காரைக்காலுக்கு அடுத்துள்ள நெரவை என்ற கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் அமர்த்தினர்கள். முதல் நாள் கவிஞர் பள்ளிக்கூடத்துக்குச் செல்லுகிறார். அந்தப் பள்ளிக்கூடத்து மாணவர்கள் நம் 'கவிக்காளை'யைக் கண்டதும் "யார் இந்தப் புதுமாணவன்?" என்று கவிஞரோடு சென்ற ஒரு நண்பரிடம் கேட்டனர்.

பள்ளியில் வகுப்பு ஆரம்பமாயிற்று. பள்ளித் தலைவர், நம் கவிஞரை வகுப்புக்கு அழைத்து வந்து, "இவர்தான் உங்கள் புது ஆசிரியர்!" என்று அறிமுகப்படுத்தினர். அவ்வளவுதான்: மாணவர்களின் நாணத்தைப் பார்க்க முடியவில்லை! ஏன்? ஆசிரியருக்கு வயது பதினெட்டு: மாணவர்களுக்கோ, பத்தொன்பது, இருபதுக்கு மேலிருந்தது.

## 3. புராணக்கூற்று

நம் கவிஞரின் வாழ்க்கையிலே நிரம்ப நகைச்சுவை உண்டு. அவருடைய நகைச்சுவையான கருத்துக்களையும் இன்பமான கவிதைகளையும் ரசித்துக்கொண்டே வாழ்நாள் முழுதும் நாம் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

யாராயிருப்பினும், கவிதை எழுதும் தகுதியுடையவரோ அல்லாதவரோ, பாட்டு என்று எழுதிக் கொண்டு வந்து, திருத்திக் கொடுக்கச் சொன்னல், நம் கவியரசர் சிறிதும் வெறுப்பின்றி வந்தவர்களின் மனம் கோணுமல் திருத்திக் கொடுத்து விடுவார்.

சில தொணப்பர்களும், பழமைப்பித்தர்களும் எதையாவது எழுதிக்கொண்டுவந்து கொடுத்துத் தொந்தரவு செய்து கொண்டே இருப்பார்கள். இத்தகையோரிடத்தில் கவியரசர் தம்முடைய நகைச்சுவையைக் காட்டிவிடுவார்.

ஒருவர், "காசியில் இறக்க முத்தி, கைலையில் பிறக்க முத்தி........" இப்படியாக மூன்று அடிகள் எழுதிக்கொண்டு

வந்து, "கடைசி அடி"யை எனக்கு முடிக்கத் தெரியவில்லை; அதை முடித்துக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பார்த்தார் கவியரசர்: தனக்குள் சிரித்துக் கொண்டு,........"எனும் புராணக் கூற்றினைக் கொள்வாருண்டோ?" என எழுதி அதை முடித்துக் கொடுத்தனுப்பி விட்டார்! நகைச்சுவையிலும் கருத்து நிறைந்திருப்பதைப் பாருங்கள்.

## 4. வாழைப்பழம்

நம் கவிஞருக்குப் பெரியம்மா ஒருவர் உண்டு. ஒரு சமயம் தான் வாங்கி வந்த வாழைப்பழச் சீப்பில், கவிஞர், கவிஞரின் சகோதரர் எல்லாருக்கும் ஆளுக்கொன்று கொடுத்துவிட்டு, மீந்த பழத்தைப் பழங்கல அறையில் ஒளித்துவைத்து, 'அதை எடுத்துத் தின்னும்படி' பெரிய பிள்ளைக்குச் சைகை காட்டினாள். எப்பொழுதுமே அவர்களுக்கெல்லாம் மூத்த பிள்ளையிடம் அதிக அன்பு. (இளைய பிள்ளை நம் கவிஞர்) இந்த வஞ்சனையைக் கவிஞர் கவனித்துக் கொண்டார். பெரிய பிள்ளையோ பெரியம்மாவின் சைகையைப் புரிந்து கொள்ளவில்லை. பெரியம்மா தன்வேலை முடிந்ததெனவேறு வேலையாகச் சென்றதுதான் தாமதம். கவிஞர், பழங்கல அறைக்குள் புகுந்து, பழங்களை, ஒவ்வொன்றாகத் தின்று தீர்த்தார். தோல்களை எல்லாம் பழம் இருந்த இடத்திலே வைத்துவிட்டு ஓடியே போய்விட்டார்.

பெரியம்மா, பெரிய பிள்ளையை மறுபடியும் கூப்பிடவே, அவர் வந்து அறையைத் தேடிப்பார்த்ததில் பழத்தோல்தான்

கிடைத்தது. "அக்கா, அம்மா, சின்னப்பயல் (கவிஞர் பழத்தையெல்லாம் தின்றுவிட்டுத் தோலை வைத்திருக்கா பாரு" என்று பெரியம்மாவிடம் கண்ணீர் விட்டான். அப்ப விடமும் குற்றம் பதிவு செய்யப்படுவதை அறிந்த கவிஞர் நடந்தவற்றை ஒரு பாடலாக அமைத்து அவரிடம் கொடுத் தார். அப்பாவும் 'சின்னப்பய'லின் நியாயத்தை ஒப்புக் கொண்டார். கவிஞருக்கு அப்போது வயது பதின்மூன்று அவர் அபபோது பாடிய பாடல் பின்வருமாறு:

பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத்தேடி பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்க வேண்டும்.
கெடுநினைப்பே அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச்சீப்பில்
ஒன்று விழுக்காடு தந்தாள்;
விழுங்கிடவே அண்ணாவுக்கு
மீத்துக்கொடுக்க மறைப்பதென்ன?

## 5. குறும்பு

புதுவைக் கல்லூரியில் பலர் படித்து வந்தனர். அவர் களுடன் நமது கவிஞரும் ஒருவர். அவர்களில் இருவர் கவிஞருக்கு நெருங்கிய நண்பர்கள். ஒருவர் "பள்ளி" என்ற வகுப்பில் பிறந்தவர்; மற்றொருவர், "இடையர்" என்ற வகுப்பில் பிறந்தவர். 'பள்ளி' இசை பயில விரும்பி னார்; கற்றுத்தருமாறு 'இடைய'ரிடம் கேட்டுக் கொண்டார். அவரும் இசை பயிற்றுவிக்க இசைந்தார். முதலில் அவர்

அருணாசலக்கவியின் பாடலாகிய "என் பள்ளி கொண்டீர் ஐயா?" என்ற பாடலைத் தொடங்கினார். பாடமும் நடந்து வந்தது; இடையில், கற்றுக் கொள்பவருக்குச் சற்று வெறுப் புத்தட்டி விட்டது. பாடல் மூலமாகத் தன் வகுப்பைக்கூறித் தன்னை இழிவுபடுத்துவதாக எண்ணி வருந்தினார். இதற்கு என்ன வழி என்பதை யோசிக்க, நம் கவிஞரிடம் வந்து நடந்தவற்றைக் கூறினார்.

நடைமுறையிலே — சாதாரணமாக, ஹாஸ்யத்துக் காகவே நம் கவியரசர், நுட்பமாகவும், கேலியாகவும் தோழர்களிடம் குறும்பு செய்வது வழக்கம். இப்பொழுது கேலிக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும் கேட்க வேண்டுமா? சந்தர்ப்பத்தை ஒட்டிக் கவிஞர் 'பள்ளி'யாரிடம், "எட ராம சாமி தூதவனே" என்பதாகச் சொல்லிக் கொடுத்தார். "அட ராமசாமி தூதவனே" என்பது அருணாசலக் கவி யின் பாடல். அதையே திருத்திப்பாடிப் பாடச் செய்தார். கற்பித்தவர் வெட்கி, மீண்டும் இசை பயிற்றுவிக்க முன்வர வில்லை. சிறிது நாணமும் அடைந்தார். இந்த வெற்றிக் குப் பின்னர், அந்தப் 'பள்ளி'யார் நம் கவிஞருக்கு மிக்க மதிப்புச் செலுத்த ஆரம்பித்தார்.

## 6. தங்கக் கலசம்

நம் கவிஞர் பொழுது போக்குக்காக மாலை வேளையில் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து அமைதி காண்பது வழக்

கம். அந்தச் சமயம் தெருவில் சிறுவர்கள் 'காற்றாடி'விட்டு விளையாடுவார்கள். ஒருநாள் இதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார் கவிஞர்.

ஒரு பையனின் 'காற்றாடி'க்கு வால் போதவில்லை. உடனே அந்தப் பையன் தன் கோவணத்தைக் கிழித்து அந்தக் காற்றாடிக்கு வால் கட்டிப் பறக்க விட்டான். காற்றாடி உயரப் பறந்துகொண்டிருக்கையில் பக்கத்தில் இருந்த கோவில் கோபுரத்தின் உச்சியில் உள்ள தங்கக் கலசத்தின் மீது அந்தக் கோவணம் சுற்றிக் கொண்டது. உடனே அந்தச் சிறுவன் பக்கத்திலுள்ள தன் தோழர்களிடம், "என் கோவணம் தங்கக்கலசத்தின் மேல் சுற்றிக் கொண்டது பார்!" என்று கூறிப் பெருமை அடைந்தான். இதற்கு ஒரு உவமை கூறுகிறார் நம் கவிஞர். அது எதற்குத் தெரியுமா?

"சொந்தமான நூல்கள் எதுவும் எழுத வகையறியாத சிலர், வேண்டாதவற்றை மொழி பெயர்த்தும், பழமையான நூல்களான, தொல்காப்பியம், திருக்குறள் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற பெரிய நூல்களில் "பதிப்பாசிரியர்" என்ற "முத்திரை" போட்டும் வருகிறார்களல்லவா? அதற்குத்தான், "என் கோவணம் தங்கக் கலசத்தின்மேல்!" என்று கூறுகிறார் கவிஞர். எப்படி உவமை?

உவமையிலும் சிறந்த கருத்தை உணர்கிறோம்!

## 7. இரகசியம்

ஒரு சமயம் புதுச்சேரியிலுள்ள கடற்கரைக்கு ஐந்தாறு நண்பர்கள் சென்றார்கள். அவர்களில் நம் கவிஞரும்

ஒருவர். ஏனையோர்களில், வணிகர், நீதிபதி, வழக்கறிஞர் பலரும் இருந்தனர். எல்லோரும் பல விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் சென்னை நகரத்தைப்பற்றிய பேச்சு வந்தது.

நீதிபதிக்குச் சென்னை நகரம் தெரியாது; அவர் பார்த்த தில்லை. அதற்காக அவர் அந்தப் பேச்சைப் பேசும்போது நாணப்பட்டு, கவிஞரிடம், "அந்தப் பேச்சை அதிகமாக இழுக்காதீர்கள்; எனக்குப் பட்டணம் தெரியாது" என்று மிக இரகசியமாகச் சொன்னார். கவிஞரும் அதைக் கவனத் துடன் கேட்டுக்கொண்டு, உடனே சொன்னார். அது சரி, அதேபோல் 'சைக்கிள்' பேச்சு வந்தால், நீங்கள் அதிகமாக இழுக்காதீர்கள் "என்று இரகசியமாகக் கூறிவைத்தார் நம் கவிஞர். ஏனென்றால், கவிஞருக்குச் சைக்கிள் விடத் தெரியாது!

## 8. தாராளம்

கவிஞர் பாரதிதாசன் அவர்கள், பழகும் எல்லோரிட மும் ஹாஸ்யமாகவும், சுவாரஸ்யமாகவும் பேசுவார். பழகு பவர்களிடத்தில் பெருமை சிறுமை பார்க்கமாட்டார். படித் தவர்—படிக்காதவர் என்ற வித்தியாசம் கிடையாது. எல் லோரிடத்திலும் அன்பும்—ஆதரவும் காட்டுவார். பலருக்கு ஆலோசனைகளும் கூறுவார். யார் யாருக்குச் சிபார்சு கடி தம் கேட்டாலும், 'தா.பி! பேனா, தாள் கொண்டுவா' என்று கூறி உடனே, வேண்டுபவருக்கு வேண்டுவன தருமாறு கடி

தம் எழுதிக் கொடுப்பார். சிலருடன் தாமே நேரில் போய் அவரவர்களுக்கு ஆகவேண்டியவற்றை நிறைவேற்றிக் கொடுப்பார். தம் பணத்தைச் செலவு செய்ய நேர்ந்தாலும் அதற்காக அஞ்சமாட்டார்.

## 9. விழிப்பு

கவிஞர் பாரதிதாசனின் உருவம் காண்போரைக் கவர வல்லது. அவர் உள்ளூரிலிருந்தாலும், வெளியூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்தாலும் ரசிகர்கள் அவரை எளிதில் கண்டு விடுவார்கள். பலருக்கு அவரைத் தெரியும். அவருக்கு ஒரு சிலரைத்தான் நினைவு இருக்கும். பல நாட்கள் தொடர்ந்து பழகிக் கொண்டே இருந்தால்தான் ஞாபகம் வைத்திருப்பார். பழகிக்கொண்டே இருந்த சிலர் பல ஆண்டுகளாகக் காணுமல் இருந்தால், அவர்களின் உருவமே நினைவுக்கு வாராது. ஒரு உதாரணம்: திரு. தி. ஜ. ர. வும் பாரதிதாசனும் வெகுநாட்களுக்கு முன்பே பழகியவர்கள்; இடைக்காலத்தில் தொடர்பும் சந்திப்பும் இல்லை. கவிஞர் சென்னைக்கு வந்திருக்கிருர் என்பதை அறிந்து, அவரைக்காண தி. ஜ. ர. 'முல்லைப் பதிப்பகத்துக்கு வந்தார். கவிஞர் நின்று கொண்டிருந்தார்; தி. ஜ. ர. கவிஞரைக் கண்டார்; கவிஞரும் அவரைக் கண்டார்; இருவரும் கை கூப்பி மரியாதை செய்து கொண்டனர்; ஆனல் வந்தவர் தி. ஜ. ர. என்பது கவிஞருக்குத் தெரியாது. சிறிது விழித்தார். கவிஞருக்கு இந்த மாதிரி விழிப்பு ஏற்படும் என்பது எனக்குத் தெரியும். அதிக விழிப்புக்கு இடமில்லாமல்

"இவர்கள்தான் தி. ஜ. ர." என்றேன் நான்! "ஓ! எனக்கு அப்பவே தெரியுமே!" என்று சமாளித்துக் கொண்டு அவரைக் கட்டித் தழுவிக் கொண்டார். அந்தக் காட்சியை என்னவென்று வர்ணிப்பது? இருவர் கண்களிலும் அன்பு—ஆர்வம், உற்சாகம் அத்தனையும் பிரகாசித்தன!

## 10. உணவு

கவிஞர் யாரிடத்தில் பேசினாலும் ரொம்ப உரிமையோடு பேசுவார். ஆண் பெண் இருபாலாரிடத்திலும் மிக்க கலகலப்பாகவும் அன்பாகவும் பேசுவார். எந்த வீட்டுக்குப் போனாலும், தனக்கு விருப்பமானவற்றைத் தயார் செய்யச் சொல்லி, சுவையோடு உண்பதில் மிக்க பிரியம்.

ஒரு அன்பர் இருக்கிறார்; அவருக்குக் கவிஞரிடத்தில் எல்லையற்ற அன்பும்—ஆர்வமும் உண்டு; கவிஞரைக் கண்டு விட்டால்—அல்லது வந்திருக்கிறார் என்பதைக் கேள்விப் பட்டாலும் சரி, உடனே தமது குதிரை வண்டியுடன் வந்து கவிஞரை அழைத்துக் கொண்டு தம் வீட்டுக்குப் போய்விடுவார். அங்கே போனதும் வகை வகையான பதார்த்தங்களை ஏராளமாகத் தயார் செய்யச் சொல்லி, கவிஞருக்குப் படைத்து அவர் இன்புறுவார். இதில் அவருக்குச் சொல்லமுடியாத ஆனந்தம் ஏற்படும். ஆனால் கவிஞருக்குச் சில சமயங்களில இதில் கஷ்டம் ஏற்பட்டுவிடும். ஏனென்றால் அந்த அன்பர் வீட்டுக்குப் போனால் குறைந்த பக்ஷம் மூன்று—நாட்களுக்குப் பிறகுதான் விடுதலை கிடைக்கும்;

தவிர, நிமிஷம் தவறாமல், 'சாப்பிட வாருங்கள்'—'காபி குடியுங்கள்'—'சிறிது தூங்குங்கள்'—'பால் சாப்பிடுங்கள்' —'பலகாரங்கள் சாப்பிடுங்கள்' இப்படியாக உபசரித்துக் கவிஞரைத் திக்குமுக்காட வைத்துவிடுவார். கவிஞர் பெரிய தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளுவார். புராணக் கதைகளில் வரும் 'சிவபக்தர்கள்' போல் இருக்கும் அந்த அன்பரின் 'பக்திப்பிரவாகம்'. அன்பர்சொல்வதையோ —செய்வதையோ, சிறிதேனும் கவிஞர் மறுத்தால், அன்பர் கண்களில் நீர் ததும்பிவிடும். இந்தப் பக்திக்குக் கட்டுப் பட்டு விடுவார் கவிஞர். ஒரு முறை அன்பர் வீட்டில் உண வுக்குப் பின் பேச்சு சுவாரஸ்யமாக நடைபெற்றது. ஏதோ பலப்பல பேச்சு வந்தது; அன்பரைப் பார்த்துக் கவிஞர், "உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள்' என்றார் அன்பர். எட்டுக் குழந்தைகள் என்றார் அன்பர். "உங்க ளுக்கு வயது எத்தனை?" என்றார் கவிஞர். "முப்பத்தி ஐந்து" என்றார் அன்பர். 'முப்பத்தி ஐந்து வயது—எட் டுக் குழந்தைகள்!' என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டு, "இனிமேல் கொஞ்சம் அடக்கமாகத்தானே இருங்கள்" என்றார். அவ்வளவுதான் எல்லோருக்கும் ஒரே சிரிப்பு. எவ்வளவு நயமாகக் கூறிவிட்டார் கவிஞர். 'கர்ப்பத்தடை' யைப் பற்றிக் கவிஞர் பாடியவ ரல்லவா?

## 11. வியப்பு

கவிஞர் எந்த இடத்தில்—எப்படி சம்பாஷணைகள் செய்தாலும்—சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தாலும்

அதில் ஓர் சுவை—நயம் ஏராளமாகக் காணலாம். வார்த்தைகளும் ரத்தினச் சுருக்கமாக — மிக அழகாக—ஹாஸ்யமாக வெளிவரும். அவர் பேச்சில் தயக்கமோ—தடையோ ஏற்படாது. கடல் மடை திறந்தாற்போல்தானிருக்கும்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் கருத்தோடு குறும்பு வார்த்தைகள் பிரயோகிப்பார்.

ஒரு சமயம் 'கும்பகோணம் மகாமக'த்தைப் பற்றிக் கண்டித்து, டாக்டர் ராஜன் (இப்போதைய உணவு மந்திரி) ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்தக் குறிப்பைப் பார்த்ததும் எனக்கு வியப்பும்—திகைப்பும் ஏற்பட்டது. டாக்டர் ராஜன், பகுத்தறிவுக் கொள்கையில் பற்றுக் கொண்டு கண்டிக்கிறாரா? அல்லது டாக்டர் என்ற முறையில் சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு கண்டிக்கிறாரா? என்று எண்ணிக் கவிஞரிடம் இதைக் கூறி அபிப்பிராயம் கேட்டேன். அதற்குக் கவிஞர் கூறிய காரணத்தைக் கேட்டால் ஒரே வியப்பாக இருக்கும். மகாமக விழா, சிவமதம் சம்பந்தப்பட்டது; டாக்டர் ராஜன் வைஷ்ணவ மதத்தவர்; அதனால்தான் அதை எதிர்க்கிறார்" என்றார் கவிஞர். இந்தக் காரணத்தை ஹாஸ்யமாக எண்ணுவதா? அல்லது கருத்து நிறைந்த குறும்பு என்று கருதுவதா?

## 12 கிண்டல்

கவிஞர் எப்போதும் கிண்டலாகப் பேசுவார். இந்த மாதிரி கிண்டலாகப் பேசுவதில் அவருக்கு அலாதிப் பிரியம்.

சிலரைக் கண்டால் கவிஞருக்கு எப்போதுமே ஒரு அலுப்பு ஏற்படும். ஏனென்றால் சிலர் உருப்படியான ஒரு காரியத்தையும் செய்வதில்லை; வயிற்றுப் பிழைப்பைக் கருதி எதையாவது செய்ய முற்படுவது—பிறகு அது கலைத்தொண்டு என்றெல்லாம் பிதற்றுவார்கள். இந்த மாதிரி விஷயங்கள் கவிஞருக்கு அறவே பிடிக்காது. அந்த மாதிரி ஆட்களிடம் கவிஞர் கிண்டலாகவே பேசுவார். 'கலைத்தொண்டர்' ஒருவர் கவிஞரை ஒருநாள் காணவந்தார். "நான் இப்போது எங்கே இருக்கிறேன் தெரியுமா? நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? நான் ஒரு பெரிய மகாநாடு நடத்தப் போகிறேன். உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்" என்றெல்லாம் 'வீர தீரப் பிரதாபங்களை அளந்துவிட்டார். கவிஞர் அவற்றையெல்லாம் சாவதானமாகப் — பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, "நீ என்ன செய்தாலும் சரி, ஆகக் கூடி நீ வேலையில்லாமல் இருக்கிறாய் என்பதுமட்டும் தெரிகிறது. அதனால்தான் இந்த மகாநாடு எல்லாம்!" என்றார் கவிஞர். 'கலைத்தொண்ட'ருக்கு வாயடைத்துவிட்டது; விளக்கெண்ணெய் வடியும் முகம்போல் ஆகிவிட்டது; பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "என்ன என்னையெல்லாம் கிண்டல் செய்ய ஆரம்பித்து விட்டீர்கள்" என்றார் 'கலைத் தொண்டர்'.

## 13. மறதி

கவிஞர் பாரதிதாசனுக்கு மறதி அதிகம். இதை எண்ணினாலே சிரிப்புத்தான் அதிகம் வரும். கவிஞர் ஏதா

வது எழுதிவிட்டோ; அல்லது யாருடனாவது பேசிக்கொண்டிருந்த பிறகோ ஸ்நானம் செய்யப் போவார். அப்போது கண்ணில் கண்ணாடி இருப்பதை மறந்து தலையில் தண்ணீரைக் கொட்டிக் கொள்ளுவார். பிறகு கண்ணாடி ஞாபகம் வரும்; கழற்றி வைப்பார்.

* * * *

எப்பொழுதும் எதிலும் கவனம் செலுத்தத் தொடங்கினால், பிறவற்றில் கவனம் செலுத்தமாட்டார். உணவு நேரம் வந்தாலும் சரி, அதில் ஞாபகம் இருக்காது. அம்மா வந்து 'நீங்கள் சாப்பிட்டுவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்கக் கூடாதா? வெகுநேரம் ஆகிவிட்டதே' என்று சொல்லிய பிறகுதான் உணவு ஞாபகம் வரும். "பாண்டியன் பரிசு" காவியம் தயாராகிக் கொண்டிருக்கும் சமயம் அது.

சிகரெட் இடைவிடாது புகைத்துக் கொண்டே இருப்பார். சில சமயம் தீவிர சிந்தனையிலாழ்ந்து விட்டால் ஒன்றுமே தெரியாது. இதற்கு உதாரணம்: ஒரு சமயம் வாயில் சிகரெட் இருப்பதாக எண்ணிக் கொண்டு, பற்றவைக்க தீக்குச்சியை வாயின் அருகில் கொண்டு போனார். பிறகு, 'ஓ! சிகரெட்டே எடுக்கவில்லையோ' என்று நினைவு படுத்திக் கொண்டு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தார். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் அநேகம். இவைகளையெல்லாம் நான் பலமுறை நேரில் கண்டு அனுபவித்திருக்கிறேன். இவற்றை எழுத்தில் எவ்வளவு தூரம் உருவகம் செய்து காட்டமுடியும் என்பதை என்னால் சொல்ல முடியவில்லை.

## 14. திகைப்பு

கவிஞருக்குப் பலரைத் தெரியாது—ஞாபகம் இருக்காது என்று கூறியிருக்கிறேன் அல்லவா? அதில் ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியைப் பாருங்கள். நிரம்ப வேடிக்கையானது.

கவிஞர் இருக்கும் இடத்திற்கு ரசிகர்களில் ஒருவர் யாரேனும் வருவார். வந்தவர் கைகூப்பி மரியாதை செலுத்தி விட்டு உட்காருவார். கவிஞரும் பதில் மரியாதை செய்வார். 'வந்தவர் யார்?—பெயரென்ன..........? என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்து விடுவார் கவிஞர். யோசித்தும் புலப்படாது; "நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?" என்பார் கவிஞர். "இப்பொழுதுதான் வந்தேன்?" என்பார் வந்தவர்; "எங்கே இருந்து வருகிறீர்கள்?" என்பார் கவிஞர்; "நேராகப் பஸ் ஸ்டாண்டிலிருந்துதான் வருகிறேன்" என்பார் வந்தவர்.

இந்தமாதிரி கேள்விகளாவது ஊரைத் தெரிந்து ஒருவாறு ஆளைத் தெரிந்து கொண்டுவிடலாம்' என்பது கவிஞர் எண்ணம். வந்தவரோ மிகுந்த மரியாதையுடன் கேட்கும் கேள்விகளுக்குச் சுருக்கமாக (எதிர்பார்ப்பதை விட்டு விட்டு!)ப் பதிலளிப்பார். மேலும் சாமளித்துக் கொண்டு, "இப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்பார் கவிஞர். "நான் சும்மாதான் இருக்கிறேன்" என்பார் வந்தவர். இந்தக் கேள்வியிலும் கவிஞர் எண்ணம்

நிறைவேறாது. திணறிவிடுவார். பிறகு ஒருவாறு தைரியமாக, "நீங்க யாரு............" என்று நேரடியாகக் கேட்டுவிடுவார் கவிஞர். தாம் யார் என்பதை விவரமாக விளக்குவார் வந்தவர். அவ்வளவையும் கேட்டுக்கொண்டு, "அதுதானே கேட்டேன்—எனக்குத் தெரியுமே!" என்பார் கவிஞர்! எப்படி—கேள்விப் பரீக்ஷை?

## 15. ஐந்து முத்தம்

பூங்கோதையும், பொன்முடியும் எதிர்பாராத வகையில் நேரிட்டுக் கொள்ளுகிறார்கள். உள்ளம் ஒன்றுபடுகிறது. "கையிரண்டும் மெய்யிறுக இதழ் நிலத்தில் கன உதட்டை ஊன்றினான், விதைத்தான் முத்தம்." முத்தம் என்ற இன்ப விதையை, அவள் இதழாகிய நிலத்தில் அவன் விதைத்தானாம். மற்றொருமுறை இவர்கள் சந்திக்கும் பொழுது, "பூங்கோடியை மார்போடணைத்து மணற்கிழங்காய்க் கன்னத்தில் வேரோடு முத்தம் பறித்தான்" என்று கன்னமாகிய நிலத்திலிருந்து முத்தமாகிய கிழங்கை வேரோடு பறித்ததாகக் கூறினார் கவிஞர்.

இனி மற்றொரு முத்தம் குறிக்கிறார்.

தலைவியின் தாய், காலையில் அங்கே பால் கறக்கத் தொடங்கினாள். வீட்டு நடையில் இங்கே முத்தம் தொடங்குகிறது. "மாமி அவள், பால் கறந்து முடிக்க, இங்கு மருமகனும் இச்சென்று முடித்தான் முத்தம்" என்று கூறுகிறார். தலைவன் உணர்ச்சியின் மிகுதியால் அந்த முத்தத்தை

மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின்பெருக்கே! என் செந்தமிழே! கண்ணுறங்கு

என்றார். மற்றும் பெண் குழந்தையைத் தாலாட்டுகை

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!
வேண்டாத சாதி இருட்டுவெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும்பெருமாட்டி!
புண்ணிற் சரம்விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தை
கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே!

என்று பாடுகிறார்! இனிக் கவிஞரின் உலக ஒற்றுமை காண்போம்.

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என்சிற்றூர் என்போ னுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்
தொன்னை யுள்ளம் ஒன்றுண்டு தனதுநாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல்!

இன்பம் எல்லாருக்கும் என்று பேரிகை முழக்கு! 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று தம் கவிதையின் மூலம் நா முழக்குகிறார்.

தமிழ் நாட்டிற்குப் பாரதிதாசன்தான் இன் பாரதி.

---

எப்போது துவக்கி எப்போது முடிக்கிறான் என்பது நோக்கத்தக்கது. இனி, அம் முத்தம் எப்படிப்பட்ட அணி பெறுகிறது என்றால், அவன் இதழ் அவள் கன்னத்தில், "தாமரை போய் சந்தனத்தில் புதைந்தது போலும்" என்கிறார். எப்படிப்பட்ட கன்னம்? தமிழ்ச் சுவடிக் கன்னம். சுவடியானால் உணர்வு செலுத்தப்பட வேண்டுமல்லவா? அவன் இதழாகிய உணர்வு செலுத்தப்படுகிறது. அவ்வுணர்வில் தட்டுப்படுகின்ற சுவையைக் கவிச் சுவையாக உருவகம் செய்கிறார். யாருக்கும் தெரியாமல் ஒரு முத்தம் விரைவாக நடந்து விடுகிறது. அதைக் கவிஞர் குறிப்பிடுகையில்: "மான் வந்தாற்போல் வந்து, வாய்முத்தம் தந்துவிட்டுப் போய்விட்டாள் வீட்டுக்குள் பூங்கோதை". மருண்ட விழியோடு அவள் தோன்றுவதைக் குறிக்க, மான் வந்தாற்போல என்றார்.

பிரிந்த தலைவி—தலைவன் சந்திக்கிறார்கள். அவர்களைச் சாக்காடும் நிழல்போல் தொடர்கிறது. அவன் முகத்தை அவள் அணைக்கிறாள். முத்தம் பெறுகிறாள். முத்தத்தின் முடிவில் தன்கையில் தாங்கியுள்ள அவன் முகத்தைப் பார்க்கிறாள். ஆனால் அவனுடைய முகத்தைக் காணவில்லை. "கடிதோடினாள் அத்தான் என்று அழைத்தே! நேர்ந்தோடும் இரு முகமும் நெருங்கும்போது நெடுமரத்தின் மறைவினின்று நீள்வாள் ஒன்று பாய்ந்தது மேல்! அவன் முகத்தை அணைத்தாள் நாவி! பளீரென்று முத்தம் ஒன்று பெற்றாள்! சேயின், சாந்த முகந்தனைக் கண்டாள். உடலைக்காணாள்! தலைசுமந்த கையோடு நிலத்தில் சாய்ந்தாள். தீந்தமிழர்

உயர்வினுக்குச் செத்தான். அன்பன் செத்ததற்குச் செத்தாள் அத்தென்னுட்டன்னம்."

இதோடு ஐந்து முத்தங்கள்.

## 16. கவிதையில் புரட்சி

பாரதிதாசன் அவர்களை, நாட்டினர் புரட்சிக் கவிஞர் என்று அழைக்கிறார்கள். 'பில்கணி'யத்தைத் தழுவி அவர் எழுதியுள்ள ஒரு நூலுக்குப் 'புரட்சிக்கவி' என்று பெயர் கொடுத்திருப்பதால், புரட்சிக் கவிஞர் என்று அழைக்கப் படுகிறாரா? அல்லது புரட்சி எண்ணங்களை அவர் கவிதைகள் உண்டாக்குவதால் அவ்விதம் அழைக்கப்படுகிறாரா? முதலில் பாரதிதாசன் என்ற புனைபெயரை அவர் வைத்துக் கொண்டது ஏன்? என்பதைத் தெரிந்து கொண்டாலே மேலே எழுந்த கேள்விகளுக்கு ஒருவாறு பதில் புரிந்துவிடும்.

கனக-சுப்புரத்தினம் என்ற நம் கவிஞருக்குப் பாரதியார் இட்ட பெயர், 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக-சுப்புரத்தினம்' என்பது. இவ்வாறே பாரதிதாசன் அப்போது தம் பெயரைக் குறிப்பிட்டுப் பத்திரிகைகளில் கவிதைகள்—கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். ஆயினும் அவர் பிரஞ்சிந்திய அரசாங்க அலுவலில் இருப்பவராதலால், தமக்கு ஒரு புனைபெயரைத் தேடிக் கொண்டார், 'பாரதிதாசன்' என்று!

அதன் பிறகே அவருக்குப் புரட்சி எண்ணத்தை உண்டாக்கக்கூடிய பாடல்களை வெளியிடச் சௌகரியமாயிருந்

தது. அப்போது எல்லாம் பொதுவுடைமைக் கொள்கை என்றால், அரசாங்கத்தாருக்கு மிகமிக அச்சம் என்பது அனைவருக்கும் தெரியும். அக்காலத்தில் கவிஞர் எழுதிய பாடல்களின் தொகுப்பே "பாரதிதாசன் கவிதைகள்" என்ற நூலாகும்.

பாரதிதாசன் கவிதைகளில் புரட்சிப் பாடல்கள் எவை? இதோ இருக்கின்ற பாடல்களைப் பாருங்கள்:

புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் (புதிய)

1. பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம். (புதிய)

2. இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இது எனதென்னு'மோர் கொடுமையைத் தவிர்ப்போம் ()

3. உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒரு பொருள் தனி'எனும் மனிதரைச் சிரிப்போம் (புதிய)

4. இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம். (புதிய)

இப் பாடல்கள் அக்காலத்தில் எழுதியது; இன்றையப் போர் நிலை கண்டு எழுதியது அல்ல. மற்றும்,

(1) சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!

பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகெனப் பேர்வைப்போம்!

ஈதேகாண் சமூகமே, யான் சொன்னவழியில்
ஏறுநீ! ஏறுநீ!! ஏறுநீ!!! ஏறே.

(2) ஆண்டுபவர் ஆண்டாத வகைசெய்கின்ற
அநியாயம் செய்வதெது? மதங்கள் அன்றோ?

கொண்டுவிட்டோம் பேரறிவு பெருஞ் செயல்கள்
கொழித்துவிட்டோம் என்றிங்கே கூறுவார்கள்;

பண்டொழிந்த புத்தன், ராமாநுஜன்,
முகம்மது கிறிஸ்து—எனும் பலபேர் சொல்லிச்

சண்டையிடும் அறியாமை அறிந்தாரில்லை
சமூகமே ஏறுநீ! எம்கொள்கைக்கே!

மேலே கண்ட பாட்டில், நாட்டின் நன்மைக்கு ஏற்ற அன்பு நெறி—பகுத்தறிவு என்னும் அருமையான கருத்துக்கள் மிளிர்கின்றன. மதத்தின் பெயரால் மக்களை வதைக்க வேண்டாம் எனக் கதறுகிறார் கவிஞர்.

கவிஞர் குழந்தைகளைத் தாலாட்டுகிறார்—பாடுகிறார். அங்கும் புரட்சி எண்ணத்தைப் பரப்புகிறார்.

'எல்லாம் அவன்செயலே' என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,
காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர் உழைப்பீர்என உரைக்கும் வீணருக்கும்,

மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின்பெருக்கே! என் செந்தமிழே! கண்ணுறங்கு

என்றார். மற்றும் பெண் குழந்தையைத் தாலாட்டுகை

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!
வேண்டாத சாதி இருட்டுவெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும்பெருமாட்டி!
புண்ணிற் சரம்விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தை
கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே!

என்று பாடுகிறார்! இனிக் கவிஞரின் உலக ஒற்றுமை
காண்போம்.

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என்சிற்றூர் என்போ னுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்
தொன்னை யுள்ளம் ஒன்றுண்டு தனதுநாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல்!

இன்பம் எல்லாருக்கும் என்று பேரிகை முழக்கு
'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று
சங்கே முழங்கு" என்று தம் கவிதையின் மூலம் நா
முழக்குகிறார்.

தமிழ் நாட்டிற்குப் பாரதிதாசன்தான் இன்
பாரதி.